சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ மேலைச்சிதம்ப[illegible]

# திருப்பேரூருலா

இஃது

உபசுப்பிரமணிய மரபினரும் சில நூற்களின்
ஆசிரியருமாகிய வடவழி
மு. அருணாசலக்கவிராயரால்
இயற்றப்பெற்று

கோயமுத்தூர் வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ
C. K. சுப்பிரமணிய முதலியார் B. A.,
அவர்களால் பார்வையிட்டு

தாளியூர் மிராஸ்தார்
ஸ்ரீமாந். திப்பணகவுடரவர்களால்

கோயமுத்தூர்
கிருஷ்ண விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது

1921

விலை அணா 6.] [காபிரைட்.

# முகவுரை.

சேந்தமிழுணரும் செல்வர்காள் !

மதிவளர் சடைமுடி மழுவாளனாகிய ஸ்ரீ சிவபெருமான் ஆன்மாக்களுய்யுமாறு கோவில் கொண்டருளிய சிவ தலங்கடோறும் நாமகள் நலம்பெற்று முத்தமிழ்த்துறையின் முறைபோகிய உத்தமக்கவிகளாம் உயர்மதிப்புலவர் அப் பெருமானது அரும்பெரும் பிரபாவங்களைத் தேனினும் இனிய தெவிட்டாச் செந்தமிழில் நாமணக்கப்பாடி நலஞ் சிறந்த உலாப்பிரபந்தங்கள் எண்ணிலவாயினும் எம்பெருமானுக்கும் அதுபோன்று ஓர் உலாப்பிரபந்தம் இயற்றி நிலையாத்திரைப்பவத்தை நீக்கியருள நிமலனருள் பெற நினைந்து என் புல்லறிவுக்குத் தோன்றியவாறு பட்டிப்பெருமானைப் பாட்டுடைத்தலைவனாகக்கொண்டு "திருப்பேரூருலா" எனும் பெயர் சூட்டியுள்ளேன். இது எனது கல்விக்கும் ஆற்றலுக்கும், ஒவ்வாதென உலகம் உரைக்கக்கூடும். அது உண்மையே, எனினும், உலகத்தில் சேதனாசேதனங்கட்கு அறிவையும் அளித்துக்காக்கும். அருட்கடலாம் அம்பிகை பாகனது திருவருளைத் துணையாகக்கொண்டும், சுருதி யுக்தி அனுபவ வாயிலாக நாம் கண்டறிந்த நூலின் நுட்பங்களை ஏற்கனவே கற்பனையில் திறம்பெறப் பொருத்தியும் தமிழறி நண்பர்கள் கண்டுணர்ந்து வியந்து மகிழும்படி யமைத்தும் "நெஞ்சத்து நல்லம யாமென்னும் நடுவு நிலைமையை வரம்பாகக்கொண்டு வெளியிட முற்பட்டதென்க.

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போலமைந்தொருபாற் கோடாமை சான்றோர்க்கணி" என்னும் அமுத வசனங்களை ஆன்றோர் தழுவி அங்கீகரிப்பாராக. சுபம்;

இங்ஙனம்,

மு. அருணாசலக்கவிராயர்.

வடவழி.

# சிறப்புக்கவிகள்.

---

சென்னைச் சைவசமயபக்தஜனசபை
அக்கிராஸனாதிபரும், சிவாகம்ய மஹோறதிகாசப்
பதிப்பாசிரியருமாகிய கயப்பாக்கம்
மகா-ள-ள-ஸ்ரீ சதாசிவசெட்டியார் B. A.
அவர்களியற்றிய

## அகவற்பா.

உலகம்புரக்கு மொருதிருமாலும்
இலகுறவதனை யியற்று மயனும்
அடிமுடியறியா வாதிமூர்த்தி
படிவமறிதராப் பவளவண்ணன்
மரகதவல்லியா மயிலிடப்பாகன்.
சிரமதிற்று துஞ் சிறந்தவெண்மதியன்
கண்டங்கரியன் கடுக்கையங்கண்ணியன்
விண்டலம்போற்றும் வியன்கயிலாயன்
வாஞ்சையாரூரர் மகிழ்வுறப்பாடுங்
காஞ்சிவாய்ப்பேரூர்க் கண்ணுதன்மீது
பேதைமுதலா மாதரெழுவரும்
வீதியிற்கண்டு காதல்கொளவு
மூலாதாரலொன்றிங் குலாவப்பாடினன்
நிலாவியவமுதங் குலாவியதெனவும்
மடனஃதொரீஇயத் திடமுறுமன்பி
னிடைகழிபெருந வடவழிப்பதியோன்
முத்துச்சாமியென் றித்தரைசாற்று
வித்தகனளித்த புத்திரனெனு
கருணைகரவா னருணைசலமென
வருநாற்புலமையின் வண்மைமே[illegible]ர்.

கோயமுத்தூர் வக்கீலும் மகாவித்துவானுமாயிருந்த
கந்தசாமிமுதலியார் குமாரரும்,
பண்டிதர். ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை மாணாக்கரும்,
கோயமுத்தூர் டிஸ்டிரிக்கோர்ட்டு வக்கீலும்
கோயமுத்தூர் தாலூகா இந்து தேவஸ்தானம்
கமிட்டியாரும்
தமிழ் வித்துவானும்,
முனிசிபல் வைஸ்சேர்மனுமாகிய
C. K. சுப்பிரமணியமுதலியார் B. A.,
அவர்கள் சொல்லியது.
அறுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.

---

நீருறுஞ் சடைமுடியான் நெடியானுக் கறிவரியான்
நிறைநகர வன்பின்
ஆரூரர்க் கொருதோழ னேறூர்ந்து வருதேவ
னணியார் காஞ்சிப்
பேரூரர் பெருமான்றன் திருப்பவனி யொருப்பமெய்ப்
பெண்ணி னல்லார்
ஏருறு மெழுவர்களு மிசைப்பனவா யிசைக்குழலா
வியல்பி றுய்ந்து. (1)

இடமுறுமிவ் வுலகிலெழு பிறப்பினுக்கு மெழுபருவ
[illegible]பெற்று மாபோற்
[illegible]ல் லியல்பினதாய் அகாமுத னவ்வீறு
[illegible]லவத்துக்
குடபுலத்[illegible]ாங்கேழு திருப்பதியின் வரலாறுங்
குலவி[illegible]
வடவழிவா[illegible]மருணு சலக்கவிஞன் வளம்பெறவே
வழுத்தி னனல். (2)

தருமாறிங் கிசைகின்ற றருவித்தான் றாவிதகர்
தழைக்க வாழும்
மகிபனெனுந் திப்பனைமா னன்பணிந்து மனமகிழ்ந்து
வழுத்தக் கேட்ட
மிகுபயனை இம்மையினும் விளைப்பதுடன் கங்கையொடு
வெள்ளைக் காவுந்
தொகுசடையோன் பட்டீசன் றிருவருளுக் கிலக்காகத்
துலங்குவானே. (3)

மதுரைச்செந்தமிழ்ச்சங்கத்து அங்கத்தினரும்
கரந்தைத்தமிழ்ச்சங்கத்து அங்கத்தினரும்
சித்தூர் ஜில்லா பலமனேர்
போலீஸ் சர்க்கில் இன்ஸ்பெக்டரும் ஆகிய
**துடிசைகிழார் அ. சிதம்பரனார் அவர்கள்**
இயற்றியது.

பருவமுழுதுமயாது பழுதின்முனிவர்
பலர்தவத்தைக்
கருதும்வெள்ளிமலையெனுந் தக்கணமாங்கையிலை
யதன்குணக்கிற்
பொருவில்காஞ்சிநதிக்கரையின் புறத்தோர்தலமற்
புதமுளதாய்ப்
பெருமைசான்றுவிளங்குவது பிறவாநெறியாம்
பேரூரே. (1)

பேரூருறையும்பெருமான்மேற் பெருமைபெறு
முலாவொன்று
பாரூர்புலவர்க்கமுதமெனப் பலருங்கருதி
மகிழ்வடைய
நீரூர்கழனிவடவழியினிகழுமருணை
சலக்கவிஞன்
சீரூர்கலிவெண்பாவாலே தெரித்தானணியை
விரித்தானே. (2)

பங்குகாமுருமையவட் குப்பதியைகாமேம்
பேரறிவை
யிங்குகாக்ககாவலருக்கினியதமிழ்
விளைகாநிங்
கொங்குகாத்துசோழுமிங்கோமான்வழுதி
கன்றுநிம்
எங்குகாக்குஞ்சீர்த்தியிறைனிவனுக்கிணையா
ருளரம்மா. (3)

கோயமுத்தூர் லண்டன்மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

## C. S. சொக்கலிங்கபிள்ளையவர்கள்

## இயற்றிய அறுசீராசிரிய விருத்தம்.

ஆதி புரத்துக் கேற்றவுலா அமைத்த வருமை
சொக்கலிங்கன்
ஓதும் பொருளும் அணியழகும் ஒக்க வுரைமின்
நிலினை
ஆதி யாவும் குறுமுனியும் அறிவா னனந்தே
யெம்மாலிப்
போதோ ரிறையும் புகன்றிடுதல் போதா தெனவுங்
குறித்தாயே (1)

தென்கால் வரையிற் குறுமுனியைத் திரமாயிருத்திச்
சேடனையும்
வன்கா லறவே யிலத்திருத்தி மணிசேர் முடியின்
மன்சமத்தி
தன்கா வளவ மிருக்கவெனச் சதுமா முகனார்
நிறுவவேனல்
மின்கால் வேணிப் பண்புகழை விரிப்பா ருலகி
லெவரேயோ.

ஜலகண்டபுரம் வித்வான்

## அ. வரதநஞ்சையபிள்ளையவர்களியற்றிய

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

ஆரூரர்புகழ்ந்தேத்து மணிகொங்கிற்காஞ்சிநதி
யமைந்தமுத்திப்
பேரூரர்க்கினியதமிழ்ப் பிரபந்தவுலாவொன்று
பேசினுனல்
காரூரும்பொழின் மருதாசலவேளுக்கினியபிள்ளைக்
கவிசொல்சத்தச்
சீரூருமவடவழிவாழ்ந்த மருதாசலக்கவிஞர்
திலகன்றனே. (1)

கோயமுத்தூர் தமிழபிமானியும் பைண்டருமான

## A. ஆறுமுகம்பிள்ளையவர்களாலியற்றியது.

மதுரகவிப்பிரசங்கமழைபொழியுமுகிலென்ன
வாய்மையானன்
சதுரகவிப்புலவோருக்கிவனிருகண்ணெனலாகுந்
தகைமையுள்ளோன்
சதுரகவுமயிலினங்கள்செறிந்தபொழில்வடவழியிற்
சார்ந்தோனன்பு
முதிரகவிகசிந்தெனுமருதாசலக்கவிஞன்
முறைநயிறைய்ந்து. (1)

நச்சுவாகனவிழிமின்னார்குடையுந்திருக்காஞ்சி
நதிகொள்பேரூர்க்
கச்சுவாகனவேற்றன்பட்டீசர்மீதுரைத்த
வணியுலாவை
யச்சுவாகனமேற்றியுலகினுலாவாச்செய்தா
னவனியாவு
மெச்சுவாகனுமானதாளிகேர்த்திப்பனெனும்
வேந்தன்றனே. (2)

## வெண்பா

காருருக்கந் தரத்தர் கங்காதரர் மேவுதிருப்
பேருருவா வானபோழ்தம்—பாரிற்
செவிக்குணவில் லாதபோழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். (3)

கோவையுலாப் பாடக் கூத்தராமென் றறிஞர்
நாவாலுரைத்ததுவுஞ் ஞாயமே. யாவையெனிற்
பேருருலாவும் பிறக்குமெனக் காணார்முன்
பார்பீந்நூலொனும்பயன். (4)



௳

சிவமயம்.

# திருப்பேரூருலா.

## பட்டி விநாயகர் துதி.

சீருருங் கொங்கிற் சிவதலத்துண மிக்க திருப்
பேரூர்த் திரு*வுலாப் பேசவாம் — பாரமீது
முக்கணத்தர் கைக்கனிக்கு‡முற்புகும்§பட்டிக்களிற்றை
யெக்களித்துளத் திருத்தியே

## கலிவெண்பா

அகரமுதலான வைம்பதின்மே லொன்றாய்
நிகரூவெழுத்தாய் நின்றாய் — புகலாகால்

---

* பேதைமுதலா வெழுவகைப் பருவத்தினர் யாவரும் தலைவனைக் குரிய வொருவனைக் காதல் செய்ததின் வருங் கலிவெண் பாட்டே யெனை அறிக

‡ காவிரித்தென்கரை திருக்கடிக்குளம் என்னுந் தலத்தில் மாங் கனி பெற்றது.

§ காமதேனு பட்டியிட்டுப் பூசித்தலால் பட்டி விநாயகரென இத்தலபுராணம் கூறும்.

* வேதமாய் வேதவிழுப்பொருளாய்மெய்ஞ்ஞான
போதமாய்நின்றபரி பூரணமா—மாதியாய்ச்
சத்திசிவமாய்த் தனிப்பொருளா ஞானநிலை
முத்தியுமாய்வந்த முழுமுதலாய்—பத்தி
விளையாய்முளையாய் விரிந்தனைத்துமாகிப்
புனைந்திலங்குநவ போகம்—வரையற்ற
5. மாற்றத்திற்கெட்டாத மானதத்திற்கொண்ணாத
தோற்றமுளசோதி சொரூபமா—மேற்ற
பரமதனிலாமோர் பழமாகிப்பலப்
பிரகிருதிகெட்டாப் பெருமை—விரவியே
சாத்துவிகமானவையிலே தம்பித்தமுக்குணத்தி
னைத்தகடவுளரலாகி—தோற்றுபல
வண்டபுவன மனைத்துஞ்சிருட்டியினிற்
கண்டவற்றினிற்குங் கருணையே—விண்டரிய
நின்மலமாய்நிட்களமாய் நின்றுமறைகளுஞ்
சொன்மயமாய்வந்ததுரியமாய்—நன்மையினுந்
10 தற்பரமாயாறுதத்துவத்திற்கப்பாலா
யுற்பவத்திற்காணு மொருதனியாய்—நிற்பனவு
மாறுதாரத்து மகன்றதுரியாதீதம்
பேறுதகண்ட பிரணவமாய்க்—கூறத்
தருவாளிரப்பானுந் தானிலையென்றது
மருவாயுருவா யலாது—கருதையினு
மெல்லாமிவன்வடிவ மெல்லாமிவன்றொழில்க
ளெல்லாமிவன் செயலு மென்றேத—வெல்லாது
மெய்ம்மையில்லை யென வேதங்களின்றளவு
கடந்துணர்வரிய சோதிவான்—வீறுடைய

---

* வேதம்—பிரமாணம். அதிற்போந்த பிரமேயம் சிவம் இச் சிவத்தை முதலிடை கடைகளில்வேதம் பிரகாசப்படுத்து கின்றது.

# திருப்பேரூருலா.

## தசாங்கம்.

15 சித்தாதியோகர் செறிந்துறப்புதமனை
வித்தாரவெள்ளி வியன்சிலம்புஞ்—சத்தி
கிரியும்வலவன் கிரியுமயன்றன்
கிரியுமருத கிரியா—யருகாகப்
பஞ்சமுகமாய்ப் பரந்தவடிவானை
பஞ்சகிரியாம் பருவதத்தான்—கொஞ்சவருக்
கண்டளவிற்றுயர்மிசைக் கட்பொருளாக்கைசேரக்
கொண்டகலுமாறு குறிப்பித்துக்—கண்டலைக்
தந்துகலந்து தழீஇக்கொண்டவாரின்
வந்துராசித வரையிடத்தே—முந்துகய
20 முத்துமணியு முருமெகிற்சாந்துந்
தொத்துமலருந் துரைந்தாடப்—பத்தியாய்
முற்காதலனென முந்நீரொடுமயங்கு
நற்காஞ்சியென்னு நதியினையன்—போற்பாக
ஆதியுலாவை யயன்முனாகமேற்று
நாதனுமைகொங்கு நாட்டிடுஞ் சேருதிய
போகத்திலுஞ்சிறந்த புண்ணியத்தின் மெஞ்ஞான
யோகத்திலுஞ்சித்து தவலார்—சேயப்
பிறப்பையவித்துப் பெரும்புகனைத்தாங்
பிறப்பையுயிர்க்களிக்க வெய்து—மறைப்பதனைப்
25 போக்கலாற்செல்வம் புகுத்தலாலின்பமுனை
தாக்கலாற்கல்வி யருளலாற்—சேர்க்குவ
கதியைத்தரலாற் கலந்தார்கட்கு
மதியைப்பொருத்தும் வழியாய்—விதியாகத்
தெய்வீக முற்றபல தீர்த்தத்தலால்
வையமிசைகூறு மாதலமா—வையமற
மூர்த்திதலந்தீர்த்த முவகையின் மூவாது
பார்க்கில்விறும்பூது பாலித்து—பார்க்குளுயர்
காசியவிநாசி கமலாலயஞ்சேது
தேசுபெறுதென்மதுரை தில்லையாய்ப்—பேசவரு

30 மோரூருமொவ்வாதென் றோவுதாரணமாம்
பேரூரெனவிளங்கு பேரூரான் — பார்மீதென்
பாமாலைசூடி பணியுமவருளத்தின்
மாமாலைதீர்த்தருளி மாலையான் — போமாறு
சிந்தைசெய்து கடந்து செஞ்சுவலிற் றுவலருந்
தொந்தமுள வேதசூரக்கத்தா — னந்தமா
யங்குசமும் பாசமுமெம் பாடனைக்கினிதாய்த்
தங்குமவனை நியதிற் றுனிநீறுத் — துங்கமுள
வீரபயிரமதுப்பை யேந்துபயிரவனைத்தின்
போயிரங்கமதக் கொய்கனிற்று — மேனாகக்
35 கன்றுறுத் திசைமயோர் கந்தசேர் முடிதாழு
வின்றுறுத் தியங்கு விடையிறு — றுன்னிற்கு
மானந்தவெள்ளத் தாழ்வோருமுழுந்த
மோனத்தங்கட்டு முனிதுன் — றுனந்த
வென்பெட்டிற்றுப்பிறவி வீக்காது போக்கவல
தின்பெட்ட றுந்தகைப் பொற்போறறு — றுண்டாய
நாதாந்தப்பாலைய நாதவிந்துவானபொருட்
டாதாரமைந்தெழுந்த றுனையான் — வாதாக
ஐயம்பலருமஞ்சப் புகுந்தகோலன்
ஐயம்பலகடனை மாயுடைன் — செய்யதிரு
40 வாரம்படைத்து வளவற்குப் பொற்குடஞ்
சாரம்படைத்த வணிமுடியான் — ஈரற்
செழுத்தைப்புணர்த்தி யிலக்கணமும் பூத்துப்
பழுத்தவரைத்தம் பயிற்றிக் — கொழுத்த
பரத்தைக்கொளித்து அருச்சைதிருத்திச்
சிரத்தைபயருக்குச் செயித்துக் — கரத்திற்
கனிச்சுபடைத்து வனைந்தியிடத்து
முனிச்சையுவக்கு மொருத்த — னனித்தாகச்
சிந்தாவளம்படைத்த செஞ்சுலகிறைர்வானத்
தந்தாவளமுரித்ததாறுவா — முந்து

45 மிமயமருந்திற் றிணைக்கித்தனைவா
தமயக்கருது மதிவிற் — சமயங்க
யெம்முலைவுமோயா விருவினையுமாய்வதற்கு
மும்முலையைவெட்ட முதல்வனார் — தம்பிற்
பிறந்தவெனவேழ் பெருங்கடலூழ்க
வறத்தைமறக்கி லனுகலான் — றிறத்திற்
கழுந்தாய்நிலைகலத்திற் கண்ணன்மலர்க்கண்ணனும்
பழுந்துழாயுங்கொள் பதத்தா — னெழுந்துவருங்
கூற்றுங்கோல்கோடிக் குலையவொருமகனுக்
கூற்றுக்கோவென்ன வுதவினான் — மேனாற்றீம்
50 பாற்கடலுங்கஞ்சன் பதமுஞ்சாருலகு
மேற்பதவியுய்க்கும் விமலனார் — காக்குமொரு
நாளைக்குஞ்சுகத்தி னற்குபுவிக்குங்கினி
தேளைக்குநன்னெறியைச் சேர்த்தனன் — பாருக்கு
ளாடிமுதலாவணியு ளாகிப்பூட்டாதி க
தேடரியவைப்பசிகை சேர்த்தினன் — கீழ்வினை
மாயாவிருத்தி வலிதவிர்த்துத் துயமாய்ச்
சாயாவிருத்தி தருவானுங் — காய
வினைக்கோடரத்தான் விரைந்தருளச்சங்கை
புனைக்கோடரத்த புனிதன் — றனுக்கோடி
55 மூற்சிலம்பையேவ முளரிக்கண்ணனெரித்த
விற்சிலம்பையேந்தும் விறலோன் — சொற்சிலம்பும்
வண்டுவாய்த்துப்பிதழி வாமதநான்றேனுகரா
வண்டுவாய்த்துப்பிதழி வாமத்தான் — விண்டசடைக்
கண்ணைப்பாவையிட்ட கண்ணுதலானையவற்கு
மென்னைப்பாவையிட்ட மேறறினேன் — வண்ணகத்திற்

## திருவெஞ்சமாக்கூடல்.

கண்ணுயிர்க்கோனுங் காட்சிபெறப்பூசிக்கும்
வண்ணமாய்நின்றமர்ந்திழ்க்கியா — வெண்ணு

முனைவர் புணர்ந்தவர்க் கொண்டதனை நண்ணுறுங்
குணனாய்க் குணியாய்க் குடிலையாய்த் — தனைவாது
நானுவிதஞ்சியர்க்கு நானுவிலங்குக்குந்
தானுங் கிரகவொரு சாட்சியாய் — வானுடு
மானையா கண்விழித்த வல்லி யொருபாக
மானவிங்கா மதசுபயமைக் குருவே — ஊனமுறு
மோகந்திருழ்ச்சாது முத்திநெறி சேர்க்கவல
வேசக திருமுட்டிக்கசமா — யாகயத்தில்
வெஞ்சனுமோரசுரன் வீழ்ந்துபூசித்ததனால்
வெஞ்சமாக்கூடலெனு மெய்த்தலமுந் — துஞ்சா

## திருக்கருவூர்.

தமோரகதிடமாக வட்டாங்கயோக
வராகமுனிவர்வரையாய் — பாரவும்
வெற்பின் மகளாய் விளங்குமவளுருவா
யற்பவித்துநின்ற வொருகலையா — மற்புதத்த
ஆம்பரதருநிழலி னுப்பிரமகத்தியற
வாம்பரமதிமதிட்டித்துக் — காம்பிரவச்
சோமேச லிங்கமுதற் சொல்லற்கரிதான
தாமாசகனர்சயமபுவாய்க் — காமருள
தேனுவதிந்து சிருட்டித் தொழிலாக்கத்
தானும்பசுபதியாந் தானுவாய் — மானு
மலங்காரவல்லியென வம்பாடவத்தின்
வலங்காரணமாகவாய்ப்ப — நிலங்காணத்
சின்னொட்டவமிருந்த செங்கமலமேவுதாவைத்
தன்னொட்டாசுரிமை தானலந்த் — தொனை
ளடக்குமுனிவர்கள் பாதநிதியின்
வடக்கினுணர்த்தவனைத்தைக் — குடக்கிற்
றிருவாசிலோபான சேதிமத்திற்சோதி
யொருவாதிலக்குமுருவாய் — மருவுதலை

வித்தனிற் போகிமுத லெண்மருக்கு மட்டசிரா
பத்தியாருஞ் செல்வமிசப் பாலித்தி — கெத்தலமும்
பூக்கச்செடியாளும் பூமகளை யோணைக்கக்
காத்தற் கெருழிற் குமசருணையாய்ச் — சேர்த்தகொரு
பஞ்சசரணைப் பரிவகல கோற்றாக்குச்
சஞ்சீவிசிமனுவைத் தாதேறிச் — சஞ்சிதமா
முன்னைப்பிறவி முகவாயிருந்தவுருத்
தன்னையொழித்தாக்கானல்கிப் — பின்னையுள
தேவத்துதிமுனியாற் செய்யதவக்காலவரி
ஞேவிறகுறுதிசயக்கவே — பாவித்துக்
கோபிதாரத்துவசன் குட்டகோய்விட்டொழியச்
சாபவிமோசன முந்தானருளிப் — பாபமுத
லச்சமறவின்மதியத்தாதிறை ளின்னடவு
முச்சவத்திற்சேகியுடன்மாயுக் — அறசனை
மோகமேமூல முாட்குணமேசாகையெனக்
சோசமேதணபனையாய்த் தோன்றியே — வேகமுறப்
பூவாய்ச்சினங்கொலையும் பூங்காய்கனியாகிப்
பாவுமொருதாராகப் பாரதனின் — மேவபோல்
வேடக்குலத்தான் விபண்டகனுக்கும்பதவி
கூடச் சிவபுரத்திற் கூட்டியே — கூடனுடன்
வெலுனைணெய்மலையடவி வீழ்த்திதீர
முண்ணைகருங்கோவிலுடனோறும் — நண்ணுதலிற்
சண்மங்கலமாகச் சாற்றவருமாலயமாய்
மண்மங்கைமூடவருங்காலே — திண்ணைஞ்
சிதலைபடாத் திருவுருவங்காட்டு
முதலிறுதியற்றமுடிவா — யுதவுக்
திருப்பூங்குடலை சிதைத்துமறுகிற்
பொருப்பினுத்தபுழைசேர் — கரத்தைதலிழக்
கத்தரித்தபத்தருக்குங் காலேயந்த யாலைக்கு
முத்திவழங்குமுதலாகி — யுத்தத்துள

மாண்டவொருமூர்த்தம் வகிர்ந்தருளுமொன்று
காண்டலாலுள்ளக்கலக்கியே — வேண்டியிசை
யந்தோ-கொடும்பாவ மாக்கினேனெத்தாறு
முயங்கேசமிலையென்றுருகியே — யொக்கிதயம்
பொற்கலத்திலூறு பொதிந்துமேற்றி
முற்கனலின்மூழ்கமுயற்சியாய்ப் — புக்கவனை
கேரியற்குவாழ்வளித்து நீணிலத்திற்பூசுரர்க்கு
ளாரியராய்ப்போந்தவருளினன் — நேருந்
திருவிசையச்சோழருணர்ந் தேவருக்குந்தேவ
வுருவிசைவதானவொருவன் — மருவியே
பேதியாதூழியினும் போரவகண்டிதமா
யாதிகருளுரென்றுந்தலமும் — வாதமாய்

## திருப்பாண்டிக் கொடுமுடி.

மாருதமும்பன்னகமு மாறுபடுமெங்காளின்
மேருமுடியிலொன்றுவீழவே — சாரும்
மகுடஞ்சிவந்தியாய் வன்காவிரியாய்
மகுடேசனென்றும்வடிவமாய் — முகிழ்வெழு
வன்னிவிருக்க வடிவாயயனிருக்க
வன்னவன்றதையருகாக — முன்னே
யமுதகடத்தை யநணைமகற்காக்கி
யமுதபுரியமலனெனச் — சமயமுள
விம்பிதமாய் மெய்த்தலத்தின் மேன்மைமறையோரிற்
சம்மருக்கன்றன்வருத்தந்தானகல — நன்மைபெறு
வேயின்வனமாளும் வேந்தன்குலவழுதி
சேயினுளத்திற் செறிவாகி — மேயமுள
பஞ்சவரின்முன்னோன்றன் பத்திக்கிரங்கியவ
ணைஞ்சலெனநின்றருளிந்து — மிஞ்சுபொதி
கைக்குளிருந்த கடவுட்டிருமுகிலன்
கைக்குளமைந்த கவினதாய் — மிக்கெனவே
யாற்றலுடைய வலங்காரவல்லியொடு
வீற்றிருக்கவீசன்விருப்பமாய்த் — தோற்றமுத

வாரணைனு வியருக் காலங்கொடாத
பூரணமாய்க்காத்தருளின் றபோதத்திற் — சேருஞ்
சவைநயூரிக தலைவனைக் காவிரியின் மேல்பா
லவைநயுருக்கேவந்தியுற்று — முறையாக
105 வேண்டித் தொடுப்பார்க்கு வித்தகமாமுத்திதரும்
பண்டிக்கொடுமையாய்ப்பாதுகைப் — பாண்டு
புரமாய்ப்பிரமபுரம்பாத்துவாச
புரமாய்வைகைப்புசப்பலரும் — வாமா

## திருச்செங்குன்றூர்.

பூனிலாத்தேக முடைத்தாய்ச்சிறைவாலி
தானுபமாலைமுக்கண் டான்படைத்து — ஞானமய
மோட்சமுதகிர்த்தமிழ் மோனருக்கோர்காலளித்துச்
சாட்சியாய் நிற்குந் தனிமையாய் — சீர்த்திபெறத்
தம்பியுடன்போந்த தானுவடியாரின்
வெம்மையகற்றவிரும்பியே — செம்மையுள்
110 வாவெந்தவெண்ணரிறைன் றதிபதிகம்புகலு
காவந்தவர்க்கருணாகராய் — பூவந்த
சிங்கவருபன் சினைவேங்கைதன்னுருநீத்
தங்கவடிவமமையவே — யங்கமதி
லோர்பாகம்பாடகமு மோர்பாகம்பூங்கழலு
மோர்பாகம்வேணிகுழவோர்பாகஞ் — சார்பாகி
யர்த்தநாரீசனை வம்மையுடன்கலந்த
பித்தனார்வாழ்வுதருபெற்றியா — யத்தமுற
மற்கடகமுற்கவட்டியன் வாயுதலின்மீதலத்து
விற்கடகமூர்தலிறுன்மீனுமால் — பொற்குவட்டுக்
115 குன்றுதோருடைவிறு மொன்றியமாதிருச்செங்
குன்றூரெனவிளங்குங்கோத்தலமும் — பொன்றுத

## திருநணா.

வச்சிரவாகின் செய் வகுத்தவாராதனையி
னிச்சையாற் றென்னளகை யென்றுதி — யச்சுதனு

வெஞ்சமுத மோர்கடத்தி னேற்றுணும்போற் றத்தா
னஞ்சேசெலனைத்தி யதாக்கினான் — வஞ்சமிலா
வைகாசனனின்ற மாலுதாசன்சாபச்
செய்கையால்வேதக்கிறுவர்க்கு — வையமேற்
கல்லுருவை நீத்தன்று கானவழகானை
நல்லுருவைநீதலத்திரு — னல்லலாம்
காமவிழையாற் கௌசிகர்மைமாதவத்தாற்
பிர்மவிருடிபெயரிட்டோன் — றர்மனு
மந்தமனுச்சோழ றௌவநலமியக்கிச்
சந்ததியாகுந்தகைமையா — னெந்து
மருத்தாகானேவி மாயுங்கால்மேவண்ட
மருத்திலிங்கமென்னவயங்கத் — திருத்திகால்
வேதமியற்ற வியாசனிருத்தலான்
வேதகிரியெனவுமேவினான் — போதமறத்
தாம்படைத்தசெயிழையாற் றந்தாழிலைத்தாணிழந்த
தேம்பலயற்குச்செகுத்திட்டான் — வீம்பிற்
புறவாலிருவர் பொருதவுயிர்போய்ப்
பிறவாப்பேறுபெறுவித் — துறவாய
வானையோமாவென் றடர்விசுவதாமற்
கானகோகத்தியறவாக்கினான் — கானகத்திற்
சங்கோசனும்புலேனன் றனகளத்தினோர்வானை
யகாரமாகவருளினான் — சிங்காரப்
பிங்கலையின்பேரழகைப் பேணித்திரிவேணி
யின்கணிறந்தவிளங்கோவிற் — கங்கனென
மாறுபிறப்பாலம் மாதினுடன்பிறந்து
கூறுசுகத்தைக்குறிப்பித்தான் — வீரனை
கர்த்தவியங்கூறுங் கன்றுவாதியரின்
சித்தவியப்பூருஞ்செவையான் — மெய்த்தவருக்
கப்பதரிகாச்சிரமமமெனவும்யாமதிசை
யிற்பதரிகாச்சிரமென்றெய்தினான் — முற்பகலிற்
கங்கையமுனை கலைமகளுஞ்சேர்ந்தனவென்
றிங்கமுதமாகதிகாவேரியாய்ப் — பொங்கியெழுந்

சோமேம்பவாகியென வோதுமிமையமூன்றுங்
கூடும்பவாந்திரிகூடலாய் — வீடுதருஞ்
சொல்லரியவல்லரியுந் தோத்தரிக்கமாத்தரிக்குங்
குல்வலியியெனல்லைசிழற்கூடினேன் — வல்லியிடை
வேதாம்பிகைபாக மேவுசங்கமேசுரரும்
நாதாந்தமாயமைந்த நன்னகரும் — போதார்ந்த

## திருமுருகன பூண்டி.

கற்பகலோகத்துட் கலந்தவோர்மாதவிக்கீ
ழுற்பவியாநிற்குமுருவமாய் — பொற்பழியா
ஞானசபையூடு நாடுந்துருவாசர்க்
கானபிரமநடமாடியே — மோனமய
யன்புதவுற தவனுக்கருள்புரியா
விண்பமளிக்குமிறைவனாய் — முன்புகலும்
சூராதிசூரர்த் தொலைக்கவருசாயை
நீரமயிலேறுஞ்சேவலான் — காரணமாய்
வேண்டியவனிருக்கை மேவத்திருமுருகன்
பூண்டியாய்க்கந்தபுரமென்றாய் — காண்டகைய
மாசிமதிரோகணியின் மாவிழாக்கொண்டாடுந்
தேசுறுமெஞ்ஞானக்ஷேத்திரமாய் — வீசும்
புலிங்கசவனவேடன் பூமாலைத்தேறற்
கலிங்கநாடாளக்கருளை — துலங்குதிருச்
சண்முகனார்போதிலுறை தாதாவின்பேராலும்
புண்ணியமாதீர்த்தமொடுபொற்குளமும் — நண்ணுவதாய்
சிங்கத்திடைகுருவுஞ் சேருங்குடமதியிற்
பொங்குமகமும்பொலியுநாட் — கங்கையாள்
நாடிவருஞ்சுனையும் நானிலத்திற்கொண்டாடக்
கேடகற்றுமாகார்த்திகேயராய் — வீடளிக்கு
மாதவிவனேசராய் மாயூரநாதனென
காதவடிவானகநாதராய்ப் — பூதலமே
னன்றைமுன்றுஞ் நற்பாணடிநாடாளு
மின்றாள்குணவதிசமேதற்குத் — தொன்றளி

லாணமகப்பேறுண் டாக்கிவழியலைப்பக்
கானைத்துவேடுருவைக்காட்டியே—போனவழி
வன்றொண்டர்பாடே வலித்தபொருளாசை
நின்றலையாலுஞ்சம்நிகழ்த்துவே—சென்றோடிக்
கூப்பிட்டழைத்தோனைக் குட்டியேவைத்தினமுங்
கூப்பிடுவிநாயகராய்க்கொண்டாட—வெப்பின்கீ
ழெல்லையாய்வைத்தநமதீசற்குவாசமா
முல்லைவனமென்னுமூதூரும்—நல்லதொரு

## திருப்புக் கொளியூர்

மேற்றிசைக்குமன்னன் விதித்தசலதாத்தி
னுற்றலடங்கவகிலத்து—ளேற்ற
தாளமெனுமூராற் றையலருக்காணப்
பிளயமொகடனம்பேணிக்—காவுடைய
வேழுகாவுண்ணை வெழுநீர்லியனுலக
மேழுமொருழிவரவெய்தியே—மூழ்கவரு
மஞ்ஞான்றழியாதருகடனங்காண்டரிய
விஞ்ஞானகலர்க்குமேலாகி—மெஞ்ஞான
வாரணவாசி வளைகரின்மூலைதன்
வேரணவிக்கெற்குவிளக்கமாய்ப்—பூரளித்துக்
கண்டார்க்கினியவாய்க் காறுஞ்சுயம்பாகிப்
பண்டயனுக்குற்றயரிசாபம்—விண்டருளி
யிந்திரசாபந் திடாலுலகிற்குத்
தந்தியிலிக்சந்தனைமாய்த்துச்—சுந்தனது
தேவியெனுமோராக்கி சேயைப்பெறுதற்குப்
பாவித்துக்கீறனபாதலத்தின்—மேவுகின்ற
சாகச்சரிதுழற்கு நாயகனைச்சேர்த்துப்
போகத்திருத்திப்பகழெய்தி—வாகுற்ற
தேயமனைத்துந் திரிதவனவேடன்
சேயைப்பெறவுந்திருட்டித்து—மாயமுள
பங்கந்தருகீமைப் படிவமெனப்போதுஞ்
சங்கனைற்கேற்பச்சயகாட்டி—யிகரு

¶போகியிகசாபம் பொன்றொட்டுப்பெண்ணைவிடுத்
தேகவரந்தந்திடாசற்றி — காகயோர்
பொற்கலனிலேயுதிர்த்த போனகத்தினெல்சற்கு
..கதண்டறைமைவெகுமதித்துத் — தக்கதலாக்
கோபமறவென்று குத்துற்கைவைத்தவொரு
பாபமறவும்பதமளித்து — தாபமுள்
செய்யோன் குலதரும சேனன்குறைதீர
வையத்துள்ளாருமன்வரியமையா — வுய்யத்தான்
மூன்றாண்டுசென்ற முதலைவாய்கவளிக்க
வின்றார்க்கினிமைதருமீசனூர் — தோன்றும்
பெருங்கருணை பாலைப் பிரியாதருகாய்
வருங்கருணையோடுவலமா — யிருந்த
க்ஷேத்திரமும்புண்ணியநதி தீர்த்தம்பலவிளங்கி
மூர்த்திகரத்தானுமுற்றலமாய்ச் — சேர்த்துதா
லக்காலந்தேவலோ மருஞ்சிக்கர்த்தராலாற்
புக்கொளியூரென்றுறைதும் பொன்னனகரும் — மிக்கென்வ

## திருப்பேரூர்.

யித்தலங்களேழு மிருக்கையுளதாக
வொத்துவிளங்கவுயர்சொங்கு — வைத்தகலை
திங்களுமோகணியுஞ் சேர்ந்தவிதமாக
மங்களமும்மங்கையருமாகவே — யங்கியினோ
டந்தணருங்காவு மதின்மணமும்போன்றதா
யிந்தப்பதமாயிசைசொங்கு — இந்திரவின்
றொட்டித்திரைவீசி நாளுந்திவழுங்கி
கோட்டைப்புடைத்தேகிக் குஞ்சரமுங் — கூட்டிமயிற்
பீலியணிசேரப் பேர்த்துமணிகாவி
காலுங்குரவுகமகமெனச் — சாலச்

¶ போகி. இந்திரன்

சிறப்புற்றவெம்மான் சிரத்திழியுந்தாழை
பிறக்கும்பணைப்புலவுப்பேர — மறைப்புடனே
நீக்குகதிபாவி நேரேகடிச்சோன
வாக்கசிறைறந்தவணிகொங்கு — நோக்கிறு
விற்காட்டிற் சக்கநடைஞர்பொலுலங்களையும்
பின்றூட்டவந்திருப்பேரூரான் — சொன்றூட்டிங்
தகசபிரானடைந் சொல்லுகளெனமார
சங்கிறையிலோதந்தைசையயா — யிகறு
வேணைசைதலத்தின் மிக்கசுவைமாசப்
பேணவைபூக்கதிருப்பேரூரான் — நாணைமூறக்
கூடிமுபகாணங் கொண்டனமுந்தாமரையிற்
பேகந்துயில்வருபேரூரா — ஞேடுமெழின்
‡மாதரார்தம்மொழியு மைந்தர்புயவரையும்
பேதமறக்கணைவமாம்பேரூரான் — மூது
மருவக்கழிமுகத்தின் வாரிசத்திறைபைந்தேன்
பெருகவருகாஞ்சிவாய்ப்பேரூரான் — பொருவற்ற
§ஆடவருமின்னார்களைமொலுங்கந்தனைமேர்
பீடுகொளநின்றதிருப்பேரூரா — னீங்குழன்
*மங்கையரினங்கையொடு வண்பணையுங்கங்கணமும்
பிங்கலமுந்தங்கவரும்பேரூரான் — ழுகைமுளை
¶வாலுசவிஞர்குழலு மாவினமுந்தேறலுறப்
பெலுமபூகானதிருப்பேரூரான் — காலுந்
திருமாநங்கத்துரியான் செங்கமலன்காணப்
பெருமாதங்கத்துரியைப்பேணி — வருமாக்

‡ § * ¶ பின்மொழிச்சிலேடையணி. இவை ஒரு தொடரிற் பலபொருள் விளக்குவன.

சூதமமாகத் தூறுதசமைவேட்களித்த
நாதர்பூசிக்கவப்புற்ற — ஞூர்வருள
காசிபரின்மைந்தனெனுங் காலவரினுஞ்ஞானப்
பாசியகலவருள்பாலித்தோ — னேசமுறு
190 கண்ணன்வழியாய்க் கபிலைமுலையுகுத்த
விண்ணமுதமாடிவியப்பாகித் — தண்ணென்று
கன்றுவிளையாடக் காற்சுவடுங்கோட்டிலையும்
நின்றுமுடிமேயற்கீர்மையான் — பின்னைறநாட்
பட்டியிடைதோன்றப் பட்டிப்பெருமானென்
றிட்டதிருநாமமெய்தினான் — றுட்டவினை
போகத்தலமன்று மோக்கத்தலமென்ன
லாகத்தலமிருந்தவாதியான் — மாகமெனும்
பொன்னம்பலத்திற் பலிக்கும்பணிக்குநட
முன்னமியற்றுமுறையினு — னென்னவா
195 மாதவனுங்கோமுனியாய் மைந்தனுந்தான்பட்டிமுனி
யாதல்வரவுமநுக்கிரகித் — தேதமுறுங்
காலவராதியராற் கண்டுதெரிசிக்க
மூலவிலிங்கமுதனின்று — சீலமுள
போதிமரநீழற் போகதாசிதசபை
யாதிதிருமித்தபுல்வண்ணைத் — சோதி
மயனுலியற்று மணிமன்றத்தாடு
சுயநாடகவிதிகடோற்ற — வயமாகி
யூனாடனைத் துயிர்க்காணமைறவம்
ஞானநடஞ்செய்நடராசன் — மானை
200 சுமதியெனுமொருவன் சொல்லரியவேத
வமைதியறிவையகன்று — சமையமேனை
வேமாங்கிமோகத் திருங்கடலுண்மூழ்கியே
காமாங்கியாகிக்கலிதொடர — வோமாந்து
நாய்நரியுங்கௌவியுடனற்காஞ்சிவாய்புகுத்த
மெய்யசிவலோகமேற்றினான் — றேயம்

ககுமாறிஃதன்று ஞானமெனப்பேணுஞ்
சுகுமாரியென்றேதூங்கோதை—பருவாரி
§யென்றெழுமுன்ன மெழுந்தூவிதியோடு
மன்றுசிவபூசைக்காகவே—சென்றவளும்
பூங்காவனத்திற் புகுந்தேமலர்பறிக்க
வாகேசேயடைந்தவனகத்தேய்—தாங்காமற்
கண்டவிதூமனையுங் காணமுசுவாக
விண்டோய்வரைமேலிவில்லமேற்—கொண்டதொரு
புண்ணியத்தாலிந்தப் புவனத்தராசனுங்
கண்ணேரிபத்தாலிந்திரனைக்காத்தளித்து—மண்ணில்
வைகுந்தச்செங்கை மதிபனிலனு
முசுகுந்தன்சாபமுநீக்கி—திசிகந்து
காவலிதவுட்டீனை கண்ணுரம்பலானை
பாவவினையைப்பறித்திட்டான்—பூவிற்
கரிகாலனையர்க்குங் காதலுமைசேடி
பரிவாயடைந்தபதிபாகற்—சூரிய
பிறவாநெறியார் பிறவாநெறிசேர்
பிறவாநெறிமேவும்பேற்று—லுறவாக
நாவலூர்காவலர்க்கு நாட்டுந்திருமணத்தி
னைவறுத்தாண்டருட்கிறையின்—மேவுமருட்
பித்தாவெனப்பாடப் பெற்றாதருசலா
மெத்தலமுப்பாடியெதிராக—மெய்த்த
‡துடிசையடைந்து சுவைகொள்ளிருந்து
படியினுகர்ந்துபரிந்து—முடிவாகக்
சாஞ்செதிமூழ்கிச் சனையினிவாமுண்
டுஞ்செய்புகுந்தசதிபதியும்—வாஞ்சையாய்ப்
பொன்னொட்டினரும் புகழச்சணத்தோடு
தென்னைற்றுவைக்குந்நிலைசழீஇப்—புன்னைற்றப்

---

§ என்று — சூரியன்.
‡ இத்தலத்திற்கு வடகிழக்கிலுள்ளதலம்

பள்ளுமாய்ப்பள்ளியாய்ப் பார்க்கவடிவான
வெள்ளிமன்றும்விமலனூர் — தெள்ளுபுக
ழான திருத்தில்லை யந்தணருக்கான மாவுந்
தானும்விகற்பமிலதாகியே — ஞானநெறி
மற்றம்பலத்திற்கும் வாராதெனவழகு
சிற்றம்பலமென்னச்செய்தபிரா — னுற்றதோர்
தெக்கணமாநற்கயிலை சேரநடனமதா
யக்கணத்திற்றன்பூணரவினற் — சக்குவிடங்
காக்கச்சிரமீது கங்கைக்கருக்கிரக
மாக்கிரசிதயலையிடத்தன் — டாக்கவே
அங்கிக்குகாம மமுதந்தியாகி
தங்கெதிர்நீருங்கானந்தாயதாய் — மன்னுயிரா
வாசமுளகாஞ்சி மணிவிருத்தக்கைபிர
யாகைகன்மகாசிவியநாகியே — வேகமுள
பீடுதரும்பிப் பிலயாகத்துலவி
மாடிலங்கின் றவனைமையா — யாடவருஞ்
சிங்கதீர்த்தப்புனலாஞ் சேர்புன்னையந்தீ
மெங்குமிசைக்குமெழுனகார — னங்கங்கே
காயசித்துபோகருக்குங் காட்டுஞ்சிவசொருப
மாயசித்திவெள்ளிமலையருகி — லாயசித்தி
யிறவாப்பனையுஞ்சித் தேசதருவோடு
பிறவாப்புளியும்பிறப்பித்தோன் — மறைவாய்
நாவிற்புறங்கூறு நன்முனிக்குநாவளித்துக்
காவலனைங்காதியகன்காதலிப்ப — ஆவன்பிகுத்
தான்றேருக்சன்றி யரும்பாவிகட்குமுத்தி
தான்றோன்றியதாற்சமனுடு — மேன்மேன்றிற்
றென்னமயக்கு மியமற்கரசளிப்பச்
சொன்னமறைநடந்தகூட்சியான் — முன்னைநாண்
முத்திபெறமாமுனிவர் மூழ்கியதாலன்னதுவ
சித்திபுரமென்னச்சிறப்பாகி — பத்தி

சிதம்பரவுமாகத் தாண்டவத்தின் மேலைச்
சிதம்பரமென்றெல்லோருஞ்சேர — விதம்பெறவும்
பேரூரிதாய்ப் பெருமைபெறலானு
மேருகமாய்விளங்கியே — யாரும்
பரமாயிருக்கப் பரமபுரமாய்ச்
சிரமாகநின் றதிறத்தால் — வரமான
ஆதிபுரமா யாசாரணகாரணத்திற்
போதிவனமாயும் போதலாற் — போதபுர
மென்னநடனத் தா லேநாட்டியபுரமாய்
மன்னுகபிலைவசித்தலாற் — பொன்னுலகுக்
தேனுபுரமெனவுஞ் சிற்சபைகல்யாணபுர
மானபலநாமமுளமாநகரான் — கானவரில்
வங்கமீ தயத்தின் வசிக்குமொருகானத்
தங்கிரர்க்குமுத்தி யருளினோன் — பங்குறையுந்
தாக்ஷாயணிநாமந் தானகலவேகருதிக்
காட்சிபெறமாதவத்தின்காட்சிக்கோ — மாட்சியா
யண்டபுவனத்தி னுண்மைகோடித்தொகையைக்
கண்டகனைக்காக்குவகருணையான் — கொண்ட
வுமையைமணக்க வுதித்தவடிவேலற்
கிமையோர் தலைவனீன்ற — குமரியை
நன்மணஞ்செய்வித் தருளும் நயமன்புத்திரனு
ரின்மைபெறவளித்த வண்ணலே — சன்ம
வசத்துவசமேற்று மாநிலத்தையாளுங்
குசத்துவசற்கீந்தருளுங்கோமான் — வசித்தலை
சோகுலத்தவரு சேகரனின்முழுகோப்
பிரவளிக்குந்திறமையான் — சேருந்
திரிலோகமுங்கூறுஞ் செய்யவளநாட்டிற்
றிரிலோகசோழன்சிறந்தே — யரசாளத்
தீவினைகளறச் செயலளித்ததைதீக
பாவனையிற்சைவப்பயிர்பாங்கத் — தேவிக்குத்

கற்பமநுகற்பமுப கற்பமெனமுப்பயனின்
கற்பமிது நுட்பமெனக்காட்டினான் — முப்புரத்தின்
தீமையினுக்காற்றாது சென்றவமைதியினின்
வாமக்கண்டோனறிவருநாரு — வாமத்
தனையும்புனைவடிவத் தானவுருத்தாக்கம்
வனையும்விதியைவழுத்தி — னனையுமொரு
செந்தமிழர்கோமானைச் சேர்வித்துருலைக்கு
வந்தவினைபோகவரந்தந்தான் — முந்தும்
பிரமகுண்டநீற்றின் பெருமையாலெவ்வுயிர்க்கும்
கருமமதுக்குவகைகளீவினான் — வருமமுள
மேடமதியாதி மீனமதியீறாக
நாமெயிடேகயப்பினான் — நெடிய
மாலுக்குமோராழி மைந்தனழும்போது
பாலுக்குமோராழிபாலித்தான் — மேலு
முடிவைத்தகமலத்தான் மூண்டுவருங்கூற்றை
அடிவைத்தலமலர்களாக்கிப் — படிவைத்த
நந்தானைத்தானும் காட்டரியவைந்தாக
வந்தானைத்தவாயவினான் — சந்தானை
¶முன்னுகமும் $பின்னுகமும் §முன்றுமுகத்தேர
பின்னுகமுமாகநின்றபெற்றியான் — மன்னும்
பிரபவமேயில்லாத பெம்மான்விபரா
புரமேனிசுக்குலனாற்போற்பான் — கரவினு
லோங்குபிரமாணகற் கொண்டபிரசோற்பத்தியுநக்
தாங்கவிளைவினைச்சபித்திட்டோ — னோங்கிர
னுங்கிலெக்கணக்கணக்கி லக்கியத்தேசித்துரைக்குஞ்
சொக்கணக்கணத்தனித்தசொக்கனும் — பக்கமொரு

¶ இறந்தகாலம்.
§ நிகழ்காலம்.
$ எதிர்காலம்.

ஸ்ரீமுகமாயொத்த சிவமாகப்புண்ணியபவ
காமரூபமாய்நிற்குநவிஞன்—ரூமா
யுவனுயவனு வொழிந்தனவுமாக
நவதாதுணின்றுநடிப்பான்—பவஞதி
யீசானும்வெகுதா—னியமன்பிரமாதி
பேசரியவிக்கிரமம்பெற்றவிசு—வாசமுள
சித்திரபானுவிழி சேரச்சுபானுபவ
சித்திங்லேதாரணைத்துந்சேர்கையான்—சத்திக்குப்
பார்த்திபவியன் பதியாய்ச்சருவசித்து
பூத்தசர்வதாரியெனும்பொற்பினன் னேத்தரியா
ருக்குவிரோதியா யன்னும்விகிர்தியினு
னக்கரவுகுரமணியினன்—சக்கரத்தா
னந்தனனை வாசனைத் தி லைவிசயனுநகேமப்
பிந்தவலம்பியாப்பேரொளியான்—மூர்த்துவெய
மன்மதனுகதுன்முகிரன் மானவிறுக்கேர்விளம்பி
யன்னம்விளம்பிவிகாரி—மூன்றுனம்
சார்வரியவேதவெற்றி தப்பிலவலெயன்பவனைச்
சேரச்சுபகிருதுச்சோப்பித்தான்—குரோணங்கு
சோபகிருதாகத் தொல்லைகடப்பரித்து
பாபக்குரோதியாமமான்மையான்—கோபத்தான்
முன்புவிசுவசுவசுரா முற்றப்பராபவமா
யன்பிலவங்களானுசீவ—மன்பதைக்குங்
கீலகமாயோகிலை செட்டதிப்புரத்தைச்
சாலச்சௌமியத்திற்றெரித்து—மாவிற்சா
தாரணமாயேயிடத்தத் தாருவனமேவி
யாரணவிரோதகிருதானினன்—பாரிற்
பரிதாபிக்கப்புகுந்து பாகருக்கேற்க
கரியைப்பரியாகநாட்டும் பெரியோனென்
றப்பிரமாதீச்சணையி லாநினைத்தலையில்
வெப்பமுடனேற்றதலையைவீட்டினனே—விப்புவியோர

# திருப்பேரூருலா.

ஞானந்தமெய்யுருவே யந்தகவி யாக்கைதனைத்
தானந்தமாக்குஞ்சமர்த்தினே — னவுடற்
பிங்களமும்போகவருட் பேறுசருங்காலயுக்தி
யங்சுபிலைமேவியசித்தார்த்தியான் — பொங்கு
மிரவுத்திரிகையா னிங்கிரசுபூதாடு
யரவக்கிரியினிடத்தாகிக் — கரவினற்
றுன்மதிகொடிந்துபிலைக் தார்க்குமிலக்குவனோர்
முன்னவர்பூசிக்கவருமூர்த்தியா — னன்றே
ஒருத்திரோக்காரி யுணைவாமுகியா
னருத்திக்காளைவயமலன் — பொருத்துமுதற்
பாயிரத்தாட்சியுள பாவினர்போலம்மைத்தை
மாயக்குரோதனனின்மாற்றினே — னேயத்தா
லச்சயர்வுதீர வருளுவான் முருகனைப்
பிச்சையெடுத்தானைப்பித்தனே — நச்சுறவை
வீசித்திரையோட மேவுஞ்சுபகிருதை
காசித்தலமெங்கணுங்கலா — னேசத்தா
லானிவராவாடி யம்பலத்துளாவணிசக்
கோனிற்புரட்டாசிகூடலான் — றேனைப்
பசியானுகர்வானும் பைம்புனத்திருட்கு
வைமாய்க்கனியின்வடிவா — யிசைகூறு
மூர்த்தியாயாறு முகமாய்விளையாடக்
கார்த்திகைமார்கழிதைக்காசலாய்ச் — சேர்க்கவே
மைந்தனைவீன்ற மாசிலாளைந்தமிலாப்
பந்துமாமேருச்சாபக்குனிப்பா — னிங்கெதிரா
ஞாயிருஞ்செஞ்சடைமே னற்றிங்கள்வாணுதலுந்
தூயசெவ்வாயம்புதனைச்சூடினேன் — காயும்
வியாழமணியாகி வெள்ளிமலைமேலு
மயானத்துவாசநிலைவைத்தான் — வயாவினே
லச்சுவினியோகமன்றுபயனின்றென்ன
நிச்சயித்தஞானநிலையோரும் — பட்சமா

யம்பரணியா யுவக்கக்கிருத்திகைமார்
கும்பருலைப்பாலருந் தங்கோமானை — யன்பாக
வங்கையாகென்று மொழிந்தானெழில்வேணி
வெங்கையுருவாய்விளங்கினா — னீங்கிடபத்
தாரோகணிப்பா னணிமிருகசீரிடத்தான்
பாராதிரையும்பறவைக்கே — நேராக
நல்லவுபதேசம் நவின்றேபுநர்பூச
மில்லையெனவோதுமிறைவனார் — தொல்லைநா
ளப்புயப்பூசஞ்சரிப்பா னைந்தலையினொன்றொழிப்பா
னம்புயமீனைந்தெனவமாகினான் — சம்பவத்திற்
காயிலியமன்வீழ வன்றுதைத்துமேமகத்தா
னேயவுளப்பூரமென நேர்கின்றான் — வாயினு
லென்னுரைத்தீருத்தரந்தா னென்றேத்துந்தாருவனப்
பன்னியரையாமதிசைப்பானின்றே — யுன்னினுற்
றமரியலாமென்னச் சாதித்தேயத்தமொடு
சேமித்தகாஞ்சித்திரைகொண்டான் — பூமிக்கு
ளோங்குநிறைசோதியெம்முதல்விசாகனையுந்
தங்கண்ணிடத்தேதாவல்லான் — பங்குவினைத்
தந்தோனைவெண்ணிலவு தந்தோனைவிச்சுவனல்
வந்தோனையம்பகமாய்வைத்திட்டா — னைந்தமனு
சம்பராரிக்கோதுஞ் சாபவினையறுத்தே
யம்பொன்னுலகுக்காசளித்தான் — வெம்புமனக்
கேட்டைக்கிளையாட்குக் கேட்டவரமருளி
வாட்டமகற்றுதிருவாரூரான் — வேட்டவரின்
மூலமாய்ப்பூராட முன்னம்பலமேவுங்
கோலமாய்நின்றுடிக்கூத்தினான் — பாலனைத்தா
னுருத்திராடம்பரத்தா னுற்றசமனார்முன்
னுருத்தினான்சென்னிதிருவோணம் — பொருத்தியே
மாயவிட்டயாகி மலரைத்தொடுப்பானைச்
சாயுவிட்டானவுகஞ்சதயத்தான் — சேயகடம்

305 பூட்டாதிக்கும் புகழ்த்திரட்டாதி
வீரட்டானத்தலத்துமேவினான் — பேரிட்ட
§ரேவதிநாதற்கினிய நேயர்க்குபமந்ய
தேவராற்றீக்கைபெறச்சேர்த்தினான் — மேவுதல

பவனி.

மெண்ணாச் சதுரியுக மெத்தனையோ தானெனி
யண்ணுறுவனின்வன்மீகபோகராய் — விண்ணுறு
மித்தகைசேர்க்கற்றலம்மா வெம்மானருட்பிரசா
தத்தினாற்றெய்வத்தபதியார் — சித்திரித்த
மாணிக்கத்தம்பநிரீஇ வச்சிரத்திற்போதிகையு
மாணிப்பொன்றூலயணிகவருங் — காணப்
310 பவளத்தாலுத்தரமும் பச்சைமரகதமுந்
துவளப்பலகைதுலங்கவே — தவளமா
நித்திலத்திற்கோவை நிரையாயலங்கரித்து
வைத்தருளித்தமணிமாடத்தே — கர்த்தரூர்
சிங்காதனத்திற்சிறந்த வணையின்மேற்
றங்கினாக்காலைசாமத்தே — திங்களாம்
பங்குனியிலாருமுற் பக்கத்திதிகூடி
யங்கியினேநுமனுக்கவே — செங்கை
யிடபக்கொடியேற்றி யெவ்வுலகினோரு
முடைவீரனவுமதுசே — ரடையாளச்
315 $செந்துருக்கமிட்ட திருமுகத்தைச்சேரவிடுத்
தந்தரத்தோர்காணவறிக்கையாய்ச் — சந்ததமுங்
கந்தமாரெண்ணெய் கடிசேருமாத்தாளும்
வந்தங்கியாமலகமோ — டந்தமாய்க்
கௌவியமுமாரமுதுங் காணலியவெண்டதிபோ
டௌவியமிலந்தமுதமாசினியுஞ் — செய்விக்

§ பலராமன்.
$ ஓலையடைக்குஞ் [illegible]

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS - 90

கதலிப்பழச்சாறுங் கழுமுட்பழச்சாறும்
நதமாந் தமாத்தைசம்பாரம் — விதமாக
குளஞ்சிமணைத்தேனுங் கூட்டிரதமாதி
விளைஞ்சகிறைறவில்லமேற்றுக் — களைஞ்சநீர்
பொன்னிரதாபனத்திற் பூங்கர்ப்பூரப் புனுகு
சென்னிறத்தேய்வைத்தருநிறு — மிந்திலேய
சுத்தசைவாகமத்திற் சொன்னவிதிக்கேற்ப
வொத்தமந்திமுறையினேதியே — வைத்ததாம்
கல்லவயிட்டகர் நயப்பத்திருகாரர்
மெல்லவாவுதிமையந்தவே — டெல்லையிலாப்
பைங்ககதலிமென்கமுகப் பந்தனிறீஇ வெண்டாளத்
தொங்கலிலைத்தொங்கன்மலர்த்தொங்கலே — டங்கங்கே
சந்தனத்தருனிலமுந் தாமெழுக்கிட்டேகோல
முந்தவெழுதியுகவாசங் — கொரதனிப்பச்
சோதயிலைத்தோரணங்கள் சூழ்ந்ததிருப்பேரை
வீதிப்பவனிவிழவயரு — மாதிரா
வொன்றுமுதலோர்கிலிகைய யுருநிலாமண்டலத்தும்
நின்றபூசத்துமங்கைறயதாய் — நின்றிலகு
சட்பதமறித்துமது வைப்பருகவுற்றணிகொள்
புட்பவிரதத்துயிமைசபுக்குலவ — வுட்சனிவிற்
றேவாருங்கொருஞ் சித்தவித்தியாதாரு
மேவருககூடியிசைபுந்தவே — ஆவனுடன்
[illegible]மத்திகரிற்றனதன் குப்பணமகத்தனனு
மொத்துறவுவைததுகழ்ற்சவலி — சித்திரமுங்
கானைற்கொருமோடி கண்வேண்டுங்கண்வேண்டுமே
பேணித்தொழுகப்பிறவிபோ — மாறுற்ற
கலைனப்படைத்தோர்க்குக் காண்கைகடனென்ன
மண்ணளந்தமாலிடபவாகனத்தும் — வெண்ணிறத்த
யானையினுமாதியந்திரத்துமஞ்சுகத்து
மானவிழாவுமதிரவே — ஆனகமுந்
துந்திமிதிமித்தியெனச் சிந்தூடனப்பரியி
னிந்திரவிமானத்துமேழுநாள் — வந்ததா

லொண்பதாகாளி னுருகாட்டத் தஞ்சலிதான்
மென்பதுமத் தாளின் வீழ்வபோன் — மின்போ
லங்கமணிக் கண்டை யொலிநேய முருகா
பங்கனைத் தோங்கரியப் பட்டிடையுஞ் — சங்கமாய்
முந்தானைக்கள் முடியத் திரட்டியே
தந்தாக நூற்றுச் சுருகளுங் — தங்கபோற்
பொற்றாலிக்கைப் பொலியப்பூணத் தாலக
சற்றாருவாயாக்க சைத்துக் — குற்றுடைய
வாளுருங் காரிகை யுருக்கிணைப்பவாளிவி
நாளுமுதயகல முணர்த்த — நீளவுயர்
செங்கைத் தலத்திற் செறித்தென்னப் பையதாக
கங்கண முமாறிக திர்காட்ட — வெங்கும்
மறிக்கும்புயங்க வலையம்புயவளையி
னுறிக்குக்கிரணை பொலிய தாய்க் — குறிக்கு
மானுமிடமான மானின் விழிக்கிடையத்
தானுமுகந் திரிபத்தானறித்து — ஞானவுணர்
வந்தருத்துருத்துங் கொன்றுளம்பிறந்தவின்பு
தந்தசெந்தூர்§ தண்ணனைங் கைதங்கினின்று — வந்திலங்க
அருந்தவணமாட பாயதோ னிமாலை
யருந்திசினாற் றுகிலவிரித்து — மருந்தவே
பண்டைதொடிருசெவியிற் பாடவொளத்தருவார்
கண்றோனுதொங்க திக்கவே — கண்டாக்
கொண்டமலர் மாலைச் சோலையோடுத் தாக்கக்
கண்டகமுக்கதிர் வீச — அண்டத்திற்
செவ்வானனலாய்த் திசழுடைதிற்போர்வை
கௌவும்புலித்தோல்கவினவே — செவ்விபெற
அருட்பிரமத்திற் குறிற்தேனைப் பொழிபு
மாரிதழி விகணியிசையாடவுஞ் — சோதி
வைத்தமுடிமீது மாயகூட சேகரமுந்
தித்தித்துக்காட்டுந் திருமுகமு — மித்தனையிற்

§ தண்ணம், மழு.

பல்லுயிரைக்காக்கும் பரிவாலருளோர்க்கு
மல்லிற்கனிபோலனைவோரும்—நல்லதிரு
மேனியபூணீறு வெண்ணீறெனலாக
ஞானக்கலைவநயத்தழகு—மானவிசை
வேதாகமமோது செவ்வாயும்வெண்ணகையும்
போதாலங்கற்புயத்தழகும்—வேதாதி
சானைமறையீறுந் தானறியாத்தன்வடிவை
யாகங்கொக்கண்ணாடியிலறிந்தும்—வேகமுட
னத்திருக்கச்சூரிலனைகமறியாசித்தனை
வைத்துவரச்செற்கவல்லாரு—முத்திருக்கத்
தாழுருஞ்சங்கினமுஞ் சாரும்புனனோட்டி
னூழாவதரித்தவாரியரும்—போழரிற்
கொல்லிமழவன் குமரிக்குறுநோயின்
சல்லியங்களொத்தவிர்த்தானுந்—சொல்லரிய
தேவாரக்கோவை திருவாசகமிவையைப்
பூவாரமாகப்பொருத்தியே—கோவான
மின்னலெனவேணி மேவுபிறைநுதனமா
மென்னக்கலிசையிலங்கவே—பொன்னுக
நாடாதியரேனும் நாடாப்பெரும்பேறு
வீடாமவிவ்வுலகமேவலா—வீடாழி
சூழுநிலமாது தூயதவமாற்றி
வாழ்வுபெறலான வரமென்சொல்—வாழ்சென்றே
பொன்னுமலர்மீதிற் பூமகளுநாமகளு
மின்னேவினுமினிதேத்தவே—முன்னே
மிடபக்கொடுதானெழுந்தாடப்பச்சை
மடவாலுந்தாமேறி|| வையங்—கடவினுன்
சித்திரவிசித்ரமணிவைத்திலகுகைக்கவரி
யத்தியிடைமொய்த்ததிரையொத்தழகி—னைத்தரவுங்
கொக்கரைதடக்கையுள தக்கைபடகைப்பறைக
டக்கமுழவுக்குளிர்தடித்ததிர—மிக்கமுரு

|| வையம். இரதம்.

டொத்ததிமிலைத்தொகுதி சிற்றிடைவகித்ததடி
வைத்தவொருகட்பறைறவகுத்தகுணி—லெத்திசையு
மஞ்செவிடுறும்படி திரண்டாலமுந்தவிநின்
மஞ்சுகடலின்முரணிமயங்கிடவு—மிஞ்சவெழு
துந்துபியும்பேரிகையுஞ் சுற்றுலவட்டமுடன்
றந்தவிசையோர்தலைவன்றான்வந்தா—னந்தமிலாக்
கட்டழகுக்கொவ்வாக் கடவுளிவன்வந்தான்
மட்டிதழிசூடும்பிரான்வந்தா—னிட்டமுள
வீதயொருபூவணத்தின் வேசியிடத்தேயிரத
வாதஞ்செயவந்தான்வந்தான்—போதமாய்க்
கண்ணுவாதியருங் காணமறைப்பொருளின்
வண்ணஞ்சொலவந்தான்வந்தான்—திண்ணமா
யெக்காளஞ்சின்ன மியம்பவேபொற்றேரு
மக்காலைவீதியணுகவே—யெக்காலு
மாரூர்க்குளத்தெடுத்த வாடகத்தின்மாற்றறியும்
பேராற்சிறந்தபெருமையா—லாராயின்
முன்னேன்றனென்றே முடிவுக்கறிகுறியாய்
முன்னேனுமாகின் முதுசேறப்—பின்னேன்
சம்பிரமமாகச் சதுமுகனுமாதவனே
டம்*பதங்கமேறியணுகவே—யும்பாட
நாதனெடும்புட்கலைம ணனிருவருஞ்சு
வேதமதமாவின்மேலேற—வோதுங்
கருங்குதிரையாளி கருங்குதிரையேற
மருங்கேயனலோனுமையேற—வருங்கான்
மடங்கலோகாராவின் மாடேறச்சா
கடங்கனேபாரிடத்திற்காணத்—தொடங்கு
வருணன்சுறவேற வாயுமறியேறப்
பொருணன்குயர்ந்தோனும்போதக்—கிரணம்
பத்துநிலவும் பகலைமிகவாக்கு
முத்துவிமானமுயன்றேறச்—சுத்த

*பதங்கம். பறவைப்பொது.

சிருட்டிக்குவந்தருதற் சேரும்விழியா
னுருத்திரரீரைந்தொருவரோடு—பொருத்தமுறு
மீசானருத்திரரு மேகவிடையேறத்
தேசாரிரவியருந்தேரேறப்—பூசற்
பெருக்காலசுரர் பெருந்தேள்பணியாய்
மரக்காலினூர்ம்வலியினான்—திரக்காரத்
தஞ்சாச்சினத்தி னலகைக்கொடியாளும்
பஞ்சானனத்திற்பறந்தேற—வெஞ்சாத
அட்டவசுக்க ளவரவர்க்கென்றேவகுத்து
விட்டபரியின்மிசையேறத்—திட்டமாய்க்
கந்தருவர்கந்தருவங் கண்டேறவிஞ்சையரு
மந்திரவாகனத்தின்மாடேற—அந்தரத்திற்
சித்தர்கணநாதர் சேரியக்கர்கிம்புருடர்
முத்தரினமாதிமொய்க்கவே—யித்தரையி
லீரொன்பானூன விமையாவிழியினர்க
ளாருமாகாவென்றார்க்கவே—சேர்கின்ற
வேழப்பதகையுடன் மேவும்புலவோருஞ்
சூழப்பரவித்துதிக்கவே—தாழாம
லோராயிரமுகத்துண் டானகுடமுழவை
யோராயிரங்கையுளவானன்—நேராகத்
தாக்குமரவமெழு சாகரத்தினார்வமதைப்
போக்கவரையிற்புகுமுழையி—னூக்கென்ன
வாயிரஞ்சிய மணிவாய்திறந்தனைய
தூயமுகமாயிரங்கடோறும்—வாயமைத்த
சங்கமுழக்குந் தனிமுழக்காயண்டமெலா
மெங்குங்கிடுகிடெனக்காட்டத்—துங்கமுள
வீழிமிழலையான் மெய்யருளைப்பாடக்
காழியவதாரகண்ணியனு—மாழிவாய்க்
கன்மதலையூரக் கடந்தானும்வன்மீனுண்
நன்‡மதலை மீளநவின்றானுந்—தன்மைபெறக்

‡மதலை. மரக்கலம்.

¶கோமாயுவைமதுரைக் கோமான்வியப்பாக
மாமாவெனக்காணும்வாசகனுந் — தாமேயும்
புத்தரவாசனத்திற் போதாவுமாதவரு
மெத்திசையுஞ்சூழவிரைந்தேகினர் — சத்தியசந்
தான்குரவர் சமயகுரவருமுண்
டானகுரவரணியணியாய்த் — தானுலவத்
தென்னர்பெருமானுஞ் செம்பியனுஞ்சேரலனு
மன்னர்திரளும்வருந்தனியுந் — துன்னவே
டம்மாமொட்டையிற் றுக்கழுப்பேரி
கைம்மாமுதுகிற்காங்கவே — யைமா
வருணனிடக்கை யசற்றுவானேனி
விருதுடாலண்டமிடையவே — சுருதிச்
சிகாத்துவசன் றிருக்கணுதற்காற்று
மகாத்துவசன்வாவுமே — நுகர்தற்கே
கற்போனகமானான் காதலன்றன்னைச்சுரிகை
நிற்பாருக்கங்கேநெருக்ககற்றப் — பொற்பாரு
மின்னலெனவேதிரிப்ப மெய்யடிமைக்கூட்டந்
துன்னியுலகைகொடுதோத்திரிப்ப — முன்னவர்மேற்
சொந்தமாய்க்கிளைவிடு தூதுரைத்தநாவலர்க்குச்
சந்ததியாய்வந்தசிவத்தன்மையான் — செந்தமிழின்
மிக்கபுகழ்சுப்பிரமண் யக்குரிசிலுட்கருதி
நெக்குருகிமுற்கனிவினிற்கவே — மிக்கமதுப்
பத்தியோகஞ்ஞானம் பாரிலிவைமூன்றும்
நித்தியமாய்நிற்குநிலைமையாஞ் — சத்தியத்திற்
கூறவருவேதங் குறித்தவழிஞானஞ்
சேறவருண்முத்தீக்கைசெய்தோராய் — வேறின்றி
மூர்த்திகாத்தான் முகத்தாயவைந்திருடி
கோத்திரத்தானகுருக்களாய் — சேர்த்த
பாரார்த்தாதிலிங்கம் பரிசிக்குந்தான
சிரார்த்தாதியேற்குந்திறத்தின் — பரோட்சமா

¶கோமாயு. நரி.

யாதிசைவவேதியரு மாரணரின்முகத்த
நாதிசைவவேதியருஞ்ஞாதியரு—மோதரிய
கங்கைவழியாகக் காசினியிலேபிறந்த
மங்காத்திறமையுள்மாண்பார—யிங்குலவும்
போதாயனராலும் பொன்னூலகிலேமயனும்
வாதாடித்தோற்றவாத்திறல்—வேதா
சரியானணமாகத் தந்தளித்தபொன்னூ
லரியாசனமேவமைந்து—திருப்பாய்
சங்குவளைமாதவனார் தம்மருகனார்ந்த
செங்குவளைமாலைச்சிறப்பெய்தி—சிங்கமுகக்
கேதனமுந்தோகையெனுங் கேதனமுமேழியெனுங்
கேதனமுண்டானபெருங்கீர்த்தியாய்—போதப்
பருகுட்டனரின்ற பூவையரைவேட்கு
மப்பாலனென்பான்வழியே—வாவேற்று
முப்பானிரண்டு முநககருக்காதார
நட்டானதொண்டைவளநாட்டிலே—தப்பாத
கோட்டமிருபானொடு கூறெழுபத்தொன்பானென்
னோட்டாமனலாககாகளிகக்—கூட்டமா
யெத்திசையும்போற்றுவதற் கேற்றவருள்பூத்துப்
பத்துநடையும்பயனெய்த—வித்தலத்தின்
மேலோடைமென்ன விளங்குபெயாமைத்துச்
சாலவடியர்தமக்கேற்குஞ்—சீலமாய்
வந்தவிருந்தூட்டி வாராதவர்க்கெதிரா
முந்துமருந்திமூங்கியே—சந்ததமெஞ்
ஞானமுவாய்மைசலஞ்சோறிவான
தானமுடனீகைதாத்திட்டோ—ரான
பதினெண்குடியார் பதிசேர்முதன்மைப்
பதினெண்மடஞ்சேரும்பத்தி—விதியாரு
நற்குடிமைநாற்பத்தெண் ணாயிரவாரகவரு
முற்குணத்தீதப்பூணுமுதற்றேவர்—சொற்கவியா

னத்தொண்டர்சீருரைத்த நாவிற் சேக்கிழார்
வந்தமரபதனில்வந்தோரு — முன்னாக
ளுயிரநாவிற்சொலவு மாகுமோவாணனுந்தன்
ளுயிரங்கையாலெழுதலாகுமோ — வாயுங்காற்
கண்ணுதிவிற்கெட்டாத காட்சிமெய்க்கீர்த்திதிரிந்து
விண்ணவருமாட்சியெனவிற்றிருப்ப — மண்ணிற்
கனகசபையென்னக் கயிலையுருவாக
வனகனகவாதமகிழ் — விநயமா
யாடுஞ்சபையை யலங்காரமாய்வகுத்த
கூடலழகர்குலத்தொற்றவருங் — கூடலெ
வெவ்வயிருமின்று ளிருதாட்பரிபாலித்த
தவ்வுகவமாமணியின்சாந்தியார் — செவ்வி
தவமானசத்திக்கு நந்தனருமாசிச்
சிவசுப்பிரமணியதேவர் — புவிமீது
சூராசுராதியரைத் தூளாசப்போரிழைத்து
வீரவன்மைகொட்டவன்றவீரனார் — ஆரண
குலத்தலைவன்காதலிக்குக் கூற்றுவனைத் தாளைப்
பெலத்தகலைமீயாலேபேர்த்த — நிலைதகவாற்
சேவற்பதகை சினைப்புலியின்சேதனாற
மாவுற்றசீபமலர்மாலையார் — பாவிற்கே
போராயிரந்தலைமே லோரெட்டிருதாளெடுத்துப்
பேராயிரமுரைத்தும்பெருந்தோர் — பாரிடத்து
வீரநாராயணைரு மேதகையாமொற்றி
யூரதிபனுருமுவப்புற்றுத் — தார்வேயுஞ்
சச்சிதளியார் சனத்தூரசாருங்
கொச்சையரப்பள்ளிகொண்டாரும் — நிச்சயித்துப்
புற்றிடமானார் பொருவில்கோளாந்தகரா
யுற்றவரிமையுடையாராய் — வெற்றிக்
கிருக்கையிவர்குலந்தா னனைறுபசேழுந்தி
திரு பெருக்கமா

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

யந்தமுளவாய்மை யளித்தருளவல்லார்செஞ்
குந்தமரபான கொற்றவருஞ்—சிந்தையாய்
வேட்டனூலோர்தல் விவசாயவாணிபமு
நாட்டனிரைகாத்த லுழவிரண்டுங்—கூட்டியே
வேண்டியாதிக்கமதை வேண்டுவோர்க்கின்றாயின்
மீண்டினமாயுற்றதனை வேறுரைத்துக்—காண்டிசையிற்
சொல்லானுமேலாயந் தோற்றிடவுந்தாமுரைக்க
வல்லாரரென்றேது வைசியரும்—நல்ல
